**செய்தி வெளியீடு எண் – 107** **நாள்– 2–2–2010**

# அரசு செய்தி வெளியீடு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது தமிழக அரசின் சார்பில் கலைஞர்களுக்கு விருது வழங்கும் அன்னியில், அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், இயல், இசை, நாட்டிய கலைஞர்களுக்கும், தமிழக அரசின் சார்பில் விருது வழங்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. அதனையொட்டி தற்போது அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கலைஞர்களுக்கு தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் ரூபாய் 1 இலட்சம் வீதம் மூன்று விருதுகளை இயல்துறையில் பாரதி என்ற பெயரிலும், இசைத்துறையில் எம்.எஸ்.சுப்புலட்சுமி என்ற பெயரிலும், நாட்டியத் துறையில் பாலசரஸ்வதி என்ற பெயரிலும் விருதுகள் வழங்கவும், இயல், இசை, நாடக மன்ற சார்பில் கலைமாமணி விருதுகள் வழங்கும்போது இவ்விருதுகளையும் சேர்த்து வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**வெ.இறையன்பு,**
**அரசு செயலாளர்**
**சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,

சென்னை–9.